மின்னிதழ்

# தேசியம்

THESIYAM ජේසියම් www.thesiyamnews.com

குரல் - 37 25.04.2023 (செவ்வாய்க்கிழமை) பக்கங்கள் 4 ஊக்குவிப்பு : ரூ.30.00

சிறந்ததில் மிகச்சிறந்தது

OFFSET | DIGITAL | SCREEN PRINTING | CTCP PLATE MAKING | WEDDING CARDS

MATHI COLOURS

NO. 10, MURUGESAR LANE,
NALLUR, JAFFNA.
TEL : 021 222 9285
E-mail : mathicolours@gmail.com

CUSTOMER CARE
+94 77 722 2259




# முடங்கியது


## தமிழர் தாயகம்

## தமிழ் கட்சிகளின் அழைப்பிற்கு பூரண ஆதரவு

## மக்களுக்கு நன்றி தெரிவித்த தமிழ் கட்சிகள்..!

வார இதழ்
தேசியம்
THESIYAM தேசியம் www.thesiyamnews.com
ஆசிரியர் பீடம்

5ம் வட்டாரம், வேலணை வடக்கு,
வேலணை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



# அரசாங்கத்துக்கும் சர்வதேச சமூகத்துக்கும் தமிழர் தாயகம் சொல்லியிருக்கும் செய்தி

இலங்கை அரசால் கொண்டு வரப்படும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை கைவிடக் கோரியும், தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்படும் பௌத்த – சிங்கள மயமாக்கலை உடனடியாக நிறுத்தக் கோரியும் நேற்று செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்ட பொது முடக்கம் மிகப்பெரும் வெற்றியளித்திருக்கிறது. தமிழ்த் தேசியக் கட்சிகளால் ஓரணியாக விடுக்கப்பட்ட பொது முடக்க அழைப்புக்கு வடக்கு – கிழக்கில் செயற்படும் அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொண்டு பூரண ஒத்துழைப்பை வழங்கியிருந்தனர். நீண்ட காலத்துக்கு பின்னர் தமிழர் தேசம் ஒற்றுமையாக நின்று இலங்கை அரசுக்கும் சர்வதேசத்துக்கும் மிகப்பெரும் செய்தியை நேற்றைய பொதுமுடக்கத்தின் ஊடாக வெளிக்காட்டியிருக்கிறார்கள். இதுவொரு வரலாற்று நிகழ்வாகவே பார்க்கப்படவேண்டும்.

தமிழர் தேசத்துக்கு போராட்டங்களோ ,பொது முடக்கங்களோ புதிய விடயங்கள் அல்ல. ஆனால், நேற்று முன்னெடுக்கப்பட்ட பொது முடக்கம் மிக முக்கியமான ஒரு காலகட்டத்தில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டிருப்பது வரவேற்கக்கூடியதொன்று. காரணம், இன்று அரசாங்கம் முன்னெடுத்துவரும் தமிழருடைய கலை. கலாசார, பண்பாட்டு படுகொலையை சர்வதேசத்தின் கவனத்துக்கு கொண்டு செல்வதற்கும் தமிழரின் மண்ணை கூறுபோடுவதற்கு இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து முயற்சிகளை எடுத்துவரும் ஒரு சில சர்வதேச சக்திகளுக்கும், தாயக மண்ணின் மீது தமிழர்கள் கொண்டிருக்கும் பற்றின் மீதான அக்கறையை வெளிக்காட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருந்த நிலையிலேயே மேற்படி பொதுமுடக்கத்துக்கு தமிழர் தேசம் ஓரணியில் நின்று தங்களுடைய எதிர்ப்பை காட்டியிருக்கிறது. இந்த பொதுமுடக்கத்துக்கு தமிழர் தேசம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கியதன் மூலம் இலங்கை அரசாங்கத்துக்கும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் சக்திகளுக்கும் தங்களுடைய மண் மீதான. பண்பாடு மீதான – கலை, கலாசாரத்தின் மீதான பற்றை வெளிக்காட்டி நிற்பதுடன், தமிழர் தேசத்துக்குள் அத்துமீறி நுழைவதை இலங்கை அரசு மாத்திரமல்ல, சர்வதேச சக்திகளும் நிறுத்த வேண்டும் என்ற செய்தியையும் ஒருமித்த குரலில் உரத்து கூறியிருக்கிறார்கள்.

அத்துடன் நேற்றைய பொதுமுடக்கத்துக்கு புலம்பெயர் அமைப்புகளும் ஆதரவு வழங்கியிருந்தன. நீண்டகாலத்துக்கு பின்னர் தமிழர் தேசத்தின் மீதான அரசாங்கத்தின் அராஜகங்களுக்கு எதிராக ஈழ-புலம்பெயர் தேசங்கள் இணைந்து ஒருமித்து ஒரு போராட்ட வடிவத்தை முன்னெடுத்திருக்கின்றன. இதே போல், புலம்பெயர் நாடுகளிலும் தமிழர் தேசத்தில் நடக்கும் அநீதிகளுக்கு எதிராக போராட்டங்கள், கவனயீர்ப்புகள் மிக விரைவில் நடப்பது தமிழர் தேசத்துக்கு மிகப்பெரும் ஆதரவாக இருக்கும் என்பதுடன், ஓய்ந்துபோயிருக்கும் தமிழர் தேசத்தின் மீதான சர்வதேசத்தின் பார்வையை மீள் எழுச்சி பெறவைப்பதற்கு உதவியாகவும் அமையும். அத்துடன், நேற்றைய பொதுமுடக்கம் இந்தளவுக்கு வெற்றியளித்ததற்கு பின்னால் முஸ்லீம் மக்களின் ஆதரவும் முஸ்லீம் அமைப்புகளின் ஆதரவும் இருந்தமை வரலாற்று பதிவாகும். அண்மைக்காலமாக சிறுபான்மையினருக்கு முன்னால் காணப்படும் அச்சுறுத்தல்களுக்கும் சவால்களுக்கும் இந்த பொதுமுடக்கத்தின் ஊடான ஒற்றுமை சிங்கள தேசத்துக்கு மிகப்பெரும் செய்தியை கொடுத்திருக்கும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது.

தென்னிலங்கையின் அராஜகம் நாளுக்கு நாள் தமிழர் தேசத்தில் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. இதற்கு தமிழர் தேசத்தின் தலைவர்கள் மீது காணப்படும் ஒற்றுமையின்மை, இராஜதந்திர வெறுமை போன்றன மிக முக்கியமானதாகும். ஆகவே தமிழர் தேசத்தின் விடிவு என்பது ஒட்டுமொத்த தமிழ் மக்களின் போராட்டத்திலேயே தங்கியிருக்கிறது. அந்த போராட்டம் என்பது நேற்றைய போராட்டம் போன்று அமையவேண்டும். அத்துடன் தமிழர்கள் இன்று எதிர்கொண்டிருப்பது சாதாரணமான விடயமல்ல. இனத்தின் அடையாளத்தை இழக்கும் யுத்தத்தை இன்று தமிழ் மக்கள் எதிர்கொண்டிருக்கிறார்கள். ஒரு இனத்துக்கு அவர்களுடைய மண், மொழி, கலை, கலாசாரம், பண்பாடு, சமயம் என்பன மிக முக்கியமானவை.

இவை இருந்தால் மாத்திரமே அந்த இனத்தின் இருப்பு சாத்தியமாகும் என்பதுடன், அந்த இனம் இந்த பூமிப்பந்தில் ஒரு தேசிய இனமாக வாழமுடியும். அந்த அடிப்படையில் தமிழர் தேசத்துக்கு எதிராக முன்னெடுக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக தமிழர் தேசம் தொடர்ந்தும் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அந்த போராட்டங்கள் என்பது நேற்றைய போராட்டம் போன்று ஒற்றுமையாக முன்னெடுக்கப்பட வேண்டும். அந்த போராட்டத்தில் எந்த வேற்றுமையும் இல்லாமல், மண்ணின் மீட் சிக்காகவும் தேசத்தின் விடுதலைக்காகவும் என்ற சிந்தனையுடனும் விடுதலை வேட்கையுடனும் எதிர்காலத்தில் இவ்வாறான ஒற்றுமைப் பயணம் தொடர வேண்டும். அதுவே இனத்தின் விடுதலைக்கு வழிவகுக்கும்.

ஆசிரியர் ■ யாழ்ப்பாணம்

# வவுனியாவில் காடழிப்பை வெளிப்படுத்திய ஆசிரியருக்கு மிரட்டல்!



வவுனியாவில் காடழிப்பை வெளிப்படுத்திய ஆசிரியர் ஒருவருக்கு மிரட்டல் விடுக்கப்பட்டதாகவும், சமூக வலைத்தளங்களிலும் அவதூறு ஏற்படுத்தப்பட்டதாகவும் தெரிவித்து பாதிக்கப்பட்ட ஆசிரியர் இன்று (25.04.2023) வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

வவுனியா – கட்டையர்குளம் பகுதியில் கடந்த சில நாட்களாக இரண்டு கிராம அலுவலர்களின் துணையுடன் காடழிப்பு இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு சென்ற அக்கிராம மக்களும், கிராம அபிவிருத்தி சங்கத்தினரும் அதனை தடுத்து நிறுத்தியதுடன் இது தொடர்பில் அரச அதிபரிடமும் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனையடுத்து, குறித்த கிராமத்தின் கிராம அபிவிருத்திசங்க உறுப்பினரான ஆசிரியருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்திய கிராம அலுவலகர் ஒருவர் தொலைபேசியில் மிரட்டியுள்ளார்.

போலி முகநூலின் ஊடக குறித்த ஆசிரியரின் புகைப்படத்தை பதிவிட்டு அவதூறும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட ஆசிரியர் குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசனிடம் முறையிட்டுள்ளதுடன், வவுனியா பொலிஸிலும் கிராம அலுவலருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

உள்ளூர் செய்திகள் ■ வவுனியா

விளம்பர
தொடர்புகளுக்கு
021 221 7557
Mobile : +94 76 567 3339

## சாணக்கியனை சாடிய அமைச்சர்:
# ஆத்திரமடைந்த சுமந்திரன்




நாடாளுமன்றத்தில் இன்றயை தினம் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனை அமைச்சர் மனுஷ நாணயக்கார சாடியமை மற்றும் இந்த சம்பவத்தை அவதானித்து பிரதி சபாநாயகர் அமைதியாக இருந்தமை உள்ளிட்ட சம்பவங்களால் அமளி துமளி நிலை ஏற்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார இன்றைய தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய சந்தர்ப்பத்தில் சாணக்கியன் குறுக்கிட்டு கருத்து தெரிவித்துள்ளார். இதன் போது "கொட்டியா எலியட்ட பென்னா" என சாணக்கியனை மனுஷ நாணயக்கார சாடியுள்ளார்.

இந்த சந்தர்ப்பத்தில் ஆத்திரமடைந்த சுமந்திரன் எழுந்து, மனுஷ நாணயக்கார சாணக்கியனை சாடிய போது பிரதி சபாநாயகர் அமைதியாக இருந்தமை மூலம் இனவாத முகம் மீண்டும் வெளிச்சத்திற்கு வந்துள்ளதாக குற்றம் சாட்டியுள்ளார். இந்த சம்பவம் காரணமாக சபையில் அமளித்துமளி ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உள்ளூர் செய்திகள் ■ யாழ்ப்பாணம்

## இரு உலக சாதனைகளை படைத்த
# 04 வயது தமிழ்ச் சிறுமி!



கல்முனை வடக்கு பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட துறை வந்தியமேடு கிராமத்தைச் சேர்ந்தவரான ஜனா சுகிர்தன் கிரண்யாஸ்ரீ எனும் 04 வயதுடைய சிறுமி இரண்டு உலக சாதனைகளை நிகழ்த்தியுள்ளார்.

இவர் தனது இரண்டு கைகளினாலும் A தொடக்கம் Z வரை குறுகிய நேரத்தில் ஆங்கில எழுத்துக்களை எழுதி அவர் ஏற்கனவே படைத்த சாதனையினை தாமே முறியடித்துள்ளார்.

அதாவது முதலாவது சாதனையாக A தொடக்கம் Z வரையான ஆங்கில எழுத்துக்கள் 3.30 நிமிடங்களில் எழுதப்பட்டது. இரண்டாவது சாதனையாக A தொடக்கம் Z வரையான ஆங்கில எழுத்துக்கள் 2.38 நிமிடங்களில் எழுதப்பட்டது. இந்நிலையில் இவற்றை இந்தியா கல்கத்தாவில் இருக்கும் Netaji world record ஆகிய உலக சாதனை புத்தக நிறுவனங்களின் ஊடாக இச் சாதனை பதியப்பட்டுள்ளது.

இந்நிலையில் உலக சாதனை படைத்த ஜனாசுகிர்தன் கிரண்யாஸ்ரீ எனும் 04 வயதுடைய சிறுமிக்கு பல்வேறு தரப்பினரும் தமது வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

உள்ளூர் செய்திகள் ■ கல்முனை

# மக்களின் வருமானத்தை பாதிக்கும்
## நிர்வாக முடக்க போராட்டமானது தேவையா!

### அங்கஜன் இராமநாதன்



மக்களின் வருமானம் பாதிக்கலாம் தமது வருமானம் பாதிக்கக் கூடாது என செயற்படுவோரை இந்த நிர்வாக முடக்கம் அடையாளம் காட்டியுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அங்கஜன் இராமநாதன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவம் செய்யும் 7 கட்சிகள் ஒன்றாக அழைப்பு விடுத்த இன்றைய நிர்வாக முடக்க போராட்டமானது இக்காலத்துக்கு உகந்ததா என்பதை குறித்த மக்கள் பிரதிநிதிகள் சிந்திக்க வேண்டும்.

இந்த நிர்வாக முடக்கலானது மக்களுடைய இயல்பு வாழ்வை பாதித்துள்ளதே தவிர, அரசாங்கத்தையோ அல்லது அதனுடைய இயக்கத்திலோ எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என்பதை கவனிக்க வேண்டும்.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள எமது மக்களை மேலும் பாதிக்கச் செய்யும் ஓர் போராட்ட வடிவம் எமக்கு எந்தவகையிலும் கைகொடுக்காது. என அவ்வறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்ளூர் செய்திகள் ■ யாழ்ப்பாணம்

# குடாக்கரை மக்கள் எதிர்நோக்கும்
## காணிப்பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடல்



திருகோணமலை - குடாக்கரை மக்கள் எதிர்நோக்கும் காணிப்பிரச்சினை சம்மந்தமாக கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது.

துறைமுகங்கள் கப்பல்துறை அமைச்சின் செயலாளர் ருவான்சந்திர மற்றும் துறைமுக அதிகார சபையின் பிரதித் தலைவர் கயான் ஆகியோரை அவர்களுடைய அலுவலகத்தில் இன்று (25.04.2023) திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம் எஸ் தௌபீக் உள்ளிட்ட குழுவினர் சந்தித்து இது தொடர்பில் கலந்துரையாடி உள்ளனர்.

திருகோணமலை சின்னம்பிள்ளை சேனை, கருமலையூற்று, வெள்ளை மணல், நாச்சிக்குடா, சீனன்குடா, கவாட்டிக்குடா, கப்பல்துறை, முத்துநகர், பாலையூத்து, மட்கோ போன்ற பிரதேசங்களில் மிக நீண்ட காலமாக குடியிருந்து வருகின்ற மக்கள் தற்பொழுது இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஏற்பட்டுள்ள காணிப்பிரச்சினைகள் சம்பந்தமாக இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பில் குடாக்கரை மக்கள் எதிர்நோக்கும் காணிப்பிரச்சினை சம்மந்தமாக விரிவாக ஆராய்ந்ததுடன் இப்பிரச்சினையை விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன்போது சீனக்குடா விகாராதிபதி சங்கைக்குறிய அலுத்ஓயா சத்தாதிஸ்ஸ, திமுத்துகம விகாராதிபதி சங்கைக்குறிய சேருவில ஜயதிஸ்ஸ, முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் பஸீர் மற்றும் குடியிருப்பாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

உள்ளூர் செய்திகள் ■ திருகோணமலை

# தமிழர் பகுதியில் மாணவனை
# காலால் உதைத்த உப அதிபர்!

பாடசாலை உப அதிபர் மாணவனை காலால் உதைத்த சம்பவம் தொடர்பாக வடமாகாண கல்வி அமைச்சின் "அப யம்" அவசர தொலைபேசி இலக்கத்திற்கு முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.
மேற்படி சம்பவம் மன்னார் மாவட்டத்திலுள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற தாக கூறப்படுகின்றது. இந் நிலையில் குறித்த உப அதிபர் மீது ஒழுக்காற்று நட வடிக்கை எடுப்பது தொடர்பாக, மாகாண கல்வி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளதாக கூறப்படுகின்றது.

உள்ளூர் செய்திகள் ■ மன்னார்

# யாழில் மருத்துவருக்கு அச்சுறுத்தல் விடுத்த குழுவால் நிறுத்தப்பட்ட சேவைகள்!



யாழில் குழு ஒன்றினால் மருத்துவருக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலை அடுத்து புத்தூர் ஆரம்ப சுகாதார பராமரிப்பு பிரிவின் மருத்துவ சேவைகளை இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மருத்துவருக்கு உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதுடன் மருத்துவரின் அலுவலகத்துக்கும் சேதம் விளைவித்தமை தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளதாக கூறப்படுகின்றது.

இதனையடுத்தே மருத்துவ சேவைகளை இடை நிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 10ஆம் திகதி புத்தூர் சந்தியில் அமைக்கப்பட்டதாக சாந்தி நிலையத்தில் ஒலிபெருக்கி பொருத்தப்பட்டு பெரிய சத்தமாக பாடல்கள் இசைக்கப்பட்ட நிலையில் தமது சேவைகளுக்கு இடையூறு ஏற்படுவதாக மருத்துவர் தெரிவித்துள்ளார்.

எனினும் மருத்துவரின் கருத்தை பொருட படுத்தாதவர்கள் தொடர்ச்சியாக பாடல்களை அலறவிட்டுள்ளனர். அந்த சம்பவத்தின் பின்னர் குழு ஒன்று மருத்துவரை எச்சரித்ததுடன், அலுவலகத்துக்கும் சேதம் விளைவித்தது.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட போதும் பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் மருத்துவர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்தவர்களை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தவேண்டும் அங்கு பணியாற்றும் ஊழியர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்திய பின்னரே ஆரம்ப சுகாதார பராமரிப்பு பிரிவின் மருத்துவ சேவைகளை மீள ஆரம்பிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வடமாகாண நிர்வாகம் பொலிஸ் உயர்மட்டத்துக்கும் அறிவித்துள்ளதாக கூறப்படுகின்றது.

உள்ளூர் செய்திகள் ■ யாழ்ப்பாணம்

# யாழ் நெடுந்தீவு கொலை வழக்கு

## சந்தேக நபர் தொடர்பில் நீதிமன்றம் விடுத்த உத்தரவு!



யாழ்ப்பாணம் நெடுந்தீவில் ஐந்து முதியவர்களை படுகொலை செய்த நபரை எதிர்வரும் 09 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் ஜே. கஜநிதிபாலன் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை நெடுந்தீவு இறங்கு துறைக்கு அருகில் உள்ள வீடொன்றில் இருந்து ஐந்து முதியவர்களின் சடலங்கள் மீட்கப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

அத்துடன் , சம்பவத்தில் 100 வயதான மூதாட்டி படுகாயங்களுடன் மீட்கப்பட்டு, யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், குறித்த வீட்டில் இரண்டு தினங்களுக்கு முன்பிருந்து தங்கியிருந்த நபரை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

கைதானவர் வெளிநாடொன்றில் வசித்து வந்த நிலையில் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டவர் எனவும் பொலிஸரார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை கடந்த ஞாயிற்றுக்கிழமை ஊர்காவற்துறை நீதவான் முன்னிலையில் முற்படுத்திய பொலிஸார் சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்க ஏதுவாக 48 மணி நேரம் பொலிஸ் காவலில் வைத்து விசாரணைகளை முன்னெடுக்க அனுமதிக்க வேண்டும் என மன்றில் கோரினர்.



பொலிஸாரின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மன்று , 48 மணி நேரத்தின் பின்னர் சந்தேக நபரை மன்றில் முற்படுத்துமாறு பணித்தது.

இதனையடுத்து நேற்று திங்கட்கிழமை சந்தேக நபரை சம்பவம் இடம்பெற்ற வீட்டிற்கு அழைத்து சென்ற பொலிஸார் , சம்பவ இடத்தில் வைத்து விசாரணைகளை முன்னெடுத்ததுடன், கொலைக்கு பயன்படுத்தப்பட்ட கத்தி மற்றும் கொலை செய்யும் போது உடுத்தியிருந்த சாரம் என்பவற்றை வீட்டின் கிணற்றில் இருந்து பொலிஸார் மீட்டு இருந்தனர்.




அதனை அடுத்து மேலதிக விசாரணைகள் முடிவடைந்த நிலையிலும் மன்றினால் வழங்கப்பட்ட 48 மணிநேர அவகாசம் முடிவடைய இருந்த நிலையில் இன்றைய தினம் சந்தேக நபரை பொலிஸார் ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தியபோது சந்தேகநபரை எதிர்வரும் 09ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

உள்ளூர் செய்திகள் ■ யாழ்ப்பாணம்

# முழு முடக்கத்திற்கு ஆதரவளித்து முழுமையாக வெற்றிபெறச் செய்த அனைவருக்கும் நன்றிகள்






25-04-2023 செவ்வாய்க்கிழமை இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்ட முழுமுடக்கப் போராட்டம் முழுமையான வெற்றியைப் பதிவுசெய்துள்ளது. இதற்கு ஆதரவளித்த அனைவருக்கும் இந்தப் போராட்டத்திற்கு அழைப்புவிடுத்த, தமிழ்த் தேசியப் பரப்பில் அரசியல் பணியாற்றிவரும் ஏழு கட்சிகளும் கூட்டாக தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளன. இதுகுறித்து அவை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையின் விபரம் வருமாறு:

இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் கலாசாரம் பண்பாடு, மற்றும் அவர்களது புராதன சின்னங்களை அழித்தொழித்து அவ்விடங்களில் புத்தகோயில்களைக் கட்டி, பௌத்த சமய திணிப்பை ஏற்படுத்துவதற்கு எதிராகவும் இலங்கை அரசாங்கம் கொண்டுவர உத்தேசித்துள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிராகவும் தமது எதிர்ப்பை முழுமையாகப் பதிவு செய்யவும் தமது கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்ளவும் வட-கிழக்கில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் இத்தகைய மிலேச்சத்தனமான நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தக் கோரியும் வடக்கு-கிழக்கில் வாழ்கின்ற தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டு நடத்திய பொதுமுடக்கமானது முழுமையாக வெற்றியடைந்துள்ளது.

தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கக்கூடிய ஏழு கட்சிகள் ஒன்றிணைந்து முழுமுடக்கத்திற்கான கோரிக்கையை முன்வைத்திருந்தனர். இதற்கு ஆதரவாக முஸ்லிம் கட்சிகளும் எம்முடன் கைகோர்த்திருந்தனர். மேலும், இந்தக் கோரிக்கைக்கு ஆதரவாக வட-கிழக்கு பல்கலைக் கழக மாணவர்கள், தொழிற்சங்கங்கள், பொது அமைப்புகள், போக்குவரத்து நிறுவனங்கள், வர்த்தக சங்கங்கள் போன்ற அனைவரும் ஒன்றிணைந்து இந்த பொதுமுடக்கம் வெற்றிபெற தமது முழுமையான ஒத்துழைப்பை நல்கினார்கள். புலம்பெயர் நாடுகளில் வாழ்கின்ற தமிழ் அமைப்புகளும் இலங்கையில் இருக்கின்ற மத நிறுவனங்களும் ஒன்றுபட்டு இந்தக் கண்டன நடவடிக்கைக்கு ஆதரவளித்திருந்தார்கள்.

இந்த முடக்கத்தைத் தடுப்பதற்கு அரசாங்கம் பல வழிகளிலும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. இவை அனைத்தையும் நிராகரித்து கோரிக்கையின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொண்ட தமிழ் முஸ்லிம் மக்கள் அதற்குத் தனது உணர்வுபூர்வமான முழுமையான ஒத்துழைப்பை நல்கினார்கள். வட-கிழக்கை முழுமையாக ஸ்தம்பிதம் அடையச்செய்து மக்கள் தமது உணர்வை முழுமையாக வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். அரசாங்கம் தமிழ் மக்களின் நியாயங்களைப் புரிந்துகொள்ள வேண்டும். அரசாங்கத்தின் பல்வேறு திணைக்களங்களினூடாக புராதன சின்னங்களை அழிப்பது, அந்த இடங்களில் புராதனச் சின்னங்களைப் பாதுகாப்பதற்குப் பதிலாக புதிய புத்தகோயில்களைக் கட்டுவது, சைவக் கோயில்களை இடித்தழிப்பது போன்ற அனைத்து நடவடிக்கைகளையும் இனியாவது நிறுத்த வேண்டும்.

அதேபோன்று இந்த நாட்டிற்கு பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் தேவையில்லை என்பதைப் புரிந்துகொண்டு, அதனைக் கைவிடுவதுடன், இப்பொழுது உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டமும் நீக்கப்படவேண்டும். தமிழ் மக்களின் இவ்வலுவான கோரிக்கைகளை ஜனாதிபதி மாத்திரமல்லாமல், இந்தியா மற்றும் சர்வதேச நாடுகளும் தமிழ்பேசும் மக்களின் போராட்டத்தின் நியாயத்தினை உணர்ந்து, இவற்றைத் தீர்ப்பதற்கு தமது முழுமையான ஒத்துழைப்பைத் தர வேண்டும்.

இந்தப் போராட்டத்திற்காக மக்களைச் சந்தித்து அதற்கான தயாரிப்பு வேலைகளை மேற்கொண்டிருந்தபொழுது, முழு மக்களும் மனப்பூர்வமாக ஒத்துழைத்து, முழுமுடக்கப் போராட்டம் பூரண வெற்றியடைய தமது பூரண ஆதரவினை வழங்கியிருந்தார்கள். வடக்கு-கிழக்கில் வாழ்கின்ற சிங்கள மக்களும்கூட தமது கடைகளையும் வர்த்தக நிறுவனங்களையும் மூடி தமது முழுமையான ஆதரவினை வழங்கியமைக்காக நாம் அவர்களுக்கு சிறப்பாக நன்றிகளை கூறிக்கொள்கிறோம்.












அரசாங்கத்தின் ஒடுக்குமுறையும் அடக்குமுறையும்தான் வடக்கு-கிழக்கில் முன்னெடுக்கப்பட்ட முழுமுடக்கப் போராட்டத்தின் முழுமையான வெற்றிக்கு வழிவகுத்தது.

வடக்கு-கிழக்கில் முழு முடக்கப் போராட்டம் அறிவித்தவுடன், வடக்கு-கிழக்கில் சிங்கள பௌத்தமயமாக்கல் நடவடிக்கைகள் இடம்பெறவில்லை என்றும் அது ஒரு தவறான கருத்து என்றும் ஜனாதிபதி ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

நாம் ஜனாதிபதியிடம் கேட்பதெல்லாம், தமிழ் சைவ மக்கள் தமது ஈமைக்கடமைகளைச் செயயும் கன்னியா வெந்நீரூற்றை பௌத்த பிக்குகள் தம்வசம் வைத்திருப்பது தவறான செய்தியா? நீதிமன்ற உத்தரவையும் மீறி குருந்தூர் மலையில் புத்த கோயில் கட்டப்படவில்லையா? வெடுக்குநாறி மலையில் இருந்த ஆதிசிவன் சிவலிங்கத்தை உடைக்கவில்லையா? வடக்கு-கிழக்கின் பல பிரதேசத்தில் தொல்பொருள் இடங்கள் என்ற பெயரில், எமது கோயில்கள், எமது பிரதேசங்களை நீங்கள் அபகரிக்கவில்லையா? ஆகவே, நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாகிய நீங்கள் இவை அனைத்தையும் உடனடியாக நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நாங்கள் கோருகிறோம். இதற்குரிய நடவடிக்கைகளை நீங்கள் எடுக்காமல் நீங்கள் கண்டுகொள்ளாமல் இருப்பீர்களாக இருந்தால், தமிழ் பேசும் மக்களை நீங்கள் ஒரு தொடர் போராட்டத்திற்கு அழைக்கின்றீர்கள் என்பது அர்த்தமாகும்.

இந்த பொது முடக்கத்திற்கு ஒத்துழைத்த அனைத்து மக்களுக்கும் மீண்டும் ஒருமுறை நன்றி கூறிக்கொள்கின்றோம்.





**மாவை சேனாதிராஜா**
தலைவர் - இலங்கை தமிழ் அரசுக் கட்சி



**செல்வம் அடைக்கலநாதன் - பா.உ**
தலைவர் - தமிழ் ஈழ விடுதலை இயக்கம்



**தர்மலிங்கம் சித்தார்த்தன் - பா.உ**
தலைவர் - ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி



**சுரேஷ் பிரேமச்சந்திரன்**
தலைவர் - ஈழ மக்கள் புரட்சிக்கர விடுதலை முன்னணி



**ந. சிறீகாந்தா**
தலைவர் - தமிழ்த் தேசியக் கட்சி



**சி. வேந்தன்**
தலைவர் - ஜனநாயகப் போராளிகள் கட்சி






ஐ.ரி.என் தொலைக்காட்சியில் பணிபுரிந்த முன்னாள் பெண் ஊடகவியலாளர், பாலியல் துன்புறுத்தல்களிற்குள்ளானமை குறித்த குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணைகளை உடனடியாக முன்னெடுக்குமாறு பொதுமுகாமையாளருக்கு உத்தரவிட்டுள்ளதாக ஐ.ரி.என் தலைவர் சுதர்சன குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்கான அதிகாரியை நியமிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரச தொலைக்காட்சியொன்றின் பெண் ஊடகவியலாளர் பாலியல்துன்புறுத்தல்கள் குறித்து தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என ஊடக ஊழியர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அரசதொலைக்காட்சியொன்றில் முன்னர் பணிபுரிந்த பெண் ஊடகவியலாளர் ஒருவர் தான் மேலதிகாரியிடமிருந்து பாலியல் தொந்தரவுகளை எதிர்கொண்டதாக தனது முகநூலில் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சியாக தான் இவ்வாறான துன்புறுத்தல்களை எதிர்கொண்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெண் ஊடகவியலாளர் தான் எதிர்கொண்ட துன்புறுத்தல்களை பகிரங்கமாக தெரிவித்திருப்பதை வரவேற்றுள்ள ஊடக அமைப்பு காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளை அச்சமின்றி வெளிப்படுத்துவதற்கு அவர் முன்வந்துள்ளதையும் பாராட்டியுள்ளது.




# அதிகாரிகளால் வேட்டையாடப்படும் பெண் ஊடகவியலாளர்கள்

## அம்பலத்துக்கு வந்த அதிர்ச்சித் தகவல்!

அரசதொலைக்காட்சியில் பணியாற்றிய வேளை தான் எதிர்கொண்ட தொந்தரவுகள் அதற்கு காரணமானவர்கள் குறித்து அதன் தலைவருக்கு தெரியப்படுத்தியதாகவும் ஆதாரங்களை சமர்ப்பித்ததாகவும் ஆனால் பொறுப்பான எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் பெண் ஊடகவியலாளர் தனது முகநூலில் தெரிவித்துள்ளார்என்பதை ஊடக அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

ஆகவே அவர் தனது நன்மதிப்பை கௌரவத்தை காப்பாற்ற அங்கிருந்து விலக தீர்மானித்தார் எனவும் தெரிவித்துள்ள ஊடக அமைப்பு குறிப்பிட்ட நிறுவனத்தில் பெண்கள் தொந்தரவுகளை தொடர்ச்சியாக எதிர்கொள்ளும் சூழல் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார் எனவும் தெரிவித்துள்ளது.

பெண்கள் தொடர்ச்சியாக வன்முறைகளிற்கு உட்படுத்தப்படுகின்ற போதிலும் இவ்வாறான குற்றங்களில் ஈடுபடுபவர்கள் அரசியல் பாதுகாப்பை பெறுகின்றார்கள் ஆகவே நாட்டின் அரசியல் தலைமை இது குறித்து உத்தியோகபூர்வ விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் ஊடக அமைப்பு தெரிவித்துள்ளது.

உள்ளூர் செய்திகள் ■ கொழும்பு

# இளைஞர் குழு அட்டகாசம்

## 15 ஆயிரம் பேர் பதட்டத்துடன் வெளியேற்றம்



புத்தளம் இஜிதும விளையாட்டரங்கில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் பந்தயத்தின் போது இளைஞர்கள் குழுவொன்று மோதலில் ஈடுபட்டதால், ஏற்கனவே நடாத்துவதற்கு தயார்படுத்தப்பட்டிருந்த ஏனைய அனைத்து போட்டிகளையும் ஏற்பாட்டாளர்கள் நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதனால் இஜிதுமா மைதானத்தில் மோட்டார் சைக்கிள் மற்றும் ஏனைய போட்டிகளை காண வந்திருந்த 15 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பெரும் பதற்றத்துடன் திரும்பிச் செல்ல நேரிட்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

5 ஆண்டுகளுக்கு பிறகு ரம்ஜான் பண்டிகையை கொண்டாடும் வகையில் இந்த மோட்டார் சைக்கிள், மிதிவண்டி, முச்சக்கரவண்டி போட்டிகள் நடத்தப்பட்டு, இந்த பந்தயத்தை பார்வையாளர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்த வேளையில், சிலரால் போட்டியை சீர்குலைக்கும் வகையில் இளைஞர்கள் பாதையின் நடுவே புகுந்தனர்.

இவ்வாறு இளைஞர்கள் சென்றதை யாராலும் தடுக்க முடியவில்லை, ஏற்கனவே 1000க்கும் மேற்பட்ட இளைஞர்கள் பாதையின் நடுவே புகுந்ததை காண முடிந்தது.

இந்த பந்தயங்களுக்கு காவல்துறையினரோ அல்லது ஏனைய பாதுகாப்புப் படையினரின் பாதுகாப்பையோ ஏற்பாட்டாளர்கள் கோரவில்லை எனவும் கூறப்படுகிறது.

ஆக்ரோஷமாக நடந்து கொண்ட இளைஞர்களை கட்டுப்படுத்த முடியாமல் பந்தயங்களை நிறுத்தவும், எஞ்சிய நிகழ்வுகளை இரத்து செய்யவும் ஏற்பாட்டாளர்கள் முடிவு செய்திருந்தனர்.

அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் மற்றும் புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்.பி.ஹேரத் ஆகியோர் போட்டிகளைக் காண வந்திருந்தனர். இருவரும் பிரதான மேடையில் இருந்தபோது, இளைஞர்கள் சண்டையில் ஈடுபட்டதைக் காண முடிந்தது.

உள்ளூர் செய்திகள் ■ புத்தளம்